ஜனவரி 87

# சுட்டு

மாதஇதழ்

60 காசு

71



மு. மேத்தா சுஜாதா
பாரதிராஜா போன்றோர்
மக்களுக்கு எதிரானவர்கள்...

கம்யூனிசம்
பிரபலமான
கனவு

தூசி தட்டி
வாசித்தவை...

கல்கண்டு
பதில்கள்

— வேசக..

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நாள் ஒன்றுக்கு ரூ. 7.50!

சென்னை நகரக் காவல்துறை ஆயுதப்படையில் பெண் வார்டர்களாக விதவைகள் (கணவனால் கைவிடப்பட்டவர்கள்) சுமார் 150 பேர்கள் பணிபுரிகின்றனர். இரவு பகலாக வேலை செய்யும் இவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? நாள் ஒன்றுக்கு ரூ.7-50 மட்டுமே! வேறு எந்த சலுகைகளும் இவர்களுக்குக் கிடையாது — என்பதை அறியும்போது மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

இதுபற்றி ஒரு பெண் வார்டரை கேட்டபோது அவர் சொன்ன விவரங்கள்:

"நாங்கள் மத்திய சிறைச்சாலையில் இருக்கும் பெண் கைதிகளையும் சீர்திருத்தப்பள்ளியிலிருக்கும் சிறுமியரையும் அரசு மருத்துவமனைகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் "பாரா" கொடுத்து அழைத்துச் சென்று திரும்பக்கொண்டுவந்து விடுகிறோம்.

சில நாட்களில் காவல் நிலையங்களுக்குச் சென்று பெண் கைதிகளை எங்கள் செலவிலேயே அழைத்து வர வேண்டும். வெளிமாநிலங்களுக்குச் செல்லவேண்டிய பணிகளுக்கு எங்களுக்கும் சிருடை உண்டு இதையும் எங்கள் பணத்தில் வாங்கிக்கொள்கிறோம்.

சில மாதங்கள் மட்டும் பயணப்படியாக மூன்று ரூபாய் கொடுத்தார்கள் இப்போது அதையும் நிறுத்தி விட்டார்கள். பெண் கைதிகளில் கொலைக்காரிகள், கொள்ளைக்காரிகள், நக்ஸல்பாரிகள் போன்றவர்களுக்கு இரவு பகலாக "பாரா" கொடுத்து உழைக்கிறோம். ஒரு கைதி தப்பிவிட்டாலும் எங்கள் வேலை பறிபோகும்.

ஒரு முறை எங்கள் கோரிக்கைகளை முன்வைத்து ஊர்வலம் சென்றோம். கைது செய்யப்பட்டோம். பல முறை முதலமைச்சருக்கு எங்கள் குறைகளை தெரிவித்தும் ஒரு பயனுமில்லை. ராஜீவ் காந்திக்கும் எங்கள் குறைகளை விளக்கி மனு செய்தும் பயனில்லை."

—ஆபத்தான கைதிகளுக்குப் "பாரா" கொடுக்கும் இவர்களின் கோரிக்கைகள் நியாயமானதுதான். வேலையை நிரந்தரம் செய்தல், சீருடைகளை அரசே வழங்குதல், இலவச பஸ் பாஸ் கொடுத்தல், குறைந்த விலையில் "ரேஷன்" கொடுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிவரும் பெண் வார்டர்களுள் வேலம்மா, லீலாவதி, பத்மாவதி ஆகிய மூவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். ஏனெனில்... இவர்கள் மூவரும் தங்களது கோரிக்கைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள்.

விதவைகள், மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் வயிற்றில் அடிக்காமல் அரசு உடனே இவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுதல் வேண்டும். —இராஜாதி



FREE E - BOOKS , www.thamizham.net.,

நண்பர்களே!

தவிர்க்க இயலாதபடி சுட்டியை வெளிக் கொணரும் அத்தனை செலவுகளும் படிப்படியாக, உயர்ந்து சுட்டியின் நஷ்டத்தை மேலும் மேலும் உயர்த்தி வருகின்றன.

இக் கட்டத்தில் சுட்டியின் புதிய வடிவிற்கு ஆதரவு தெரிவித்து வரும் பெருவாரியான வாசகர்கள், சுட்டியின் விலையை உயர்த்தினாலும் பரவாயில்லை, வடிவம் தொடரட்டும் என எழுதி வருகிறார்கள்.

எனவே, உங்கள் விருப்பப்படி தொடரப்போகிறது இப்புதிய வடிவம். அத்துடன் விலையேற்றத்திற்கும் உங்கள் ஆதரவு தேவை. பிப்ரவரி 1987 இதழிலிருந்து சுட்டியின் விலை 80 காசு ஆண்டு சந்தா அஞ்சல் செலவு உட்பட ரூ. 10. ஏற்கெனவே சந்தா கட்டியவர்களுக்கு பழைய விலையிலேயே 12 இதழ்கள் முடியும் வரை அனுப்பப்படும்.

இந்த விலையேற்றத்தை சுமையாகக் கருதாமல், உங்கள் ஆதரவைத் தீவிரமாக வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன், ஆசிரியர் குழு.

**சுட்டி - தொடர்பு முகவரி மாற்றம்**

இனி வாசகர்கள், விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்வாக அலுவலக முகவரி:

AF 638 H பிளாக் அண்ணா நகர்,

சென்னை-600 040.

**பென்சன் - 1**

ஜெர்மன் போலீஸிலிருந்து 6 ஆண்டு காலப்பணிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற 8 வயது மோப்ப நாய் ஒன்றுக்கு நாளைக்கு 1-50 டாலர் (1டாலர் என்பது ரூ12.50) வீதம் பென்சன் வழங்கப்படுகிறது. லக்கி என்ற பெயருடைய அந்த நாய் தற்போது வீட்டு நாயாக உள்ளது. மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதால் போலீஸ் வேலையை விட்டுவிட்ட லாரி ஜியார் டனோவின் வீட்டில் அது உள்ளது. லக்கி ஓய்வு பெற்ற போது நகர் மன்றம் சார்பாக விழா எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பென்சன் - 2**

அரசுப் போக்குவரத்துத் தொழிலாளிகள் பணியாற்றி விட்டு ஓய்வு பெறும் போது, அவர்கள் நிம்மதியாக வாழ பென்சன் வழங்கப்பட வேண்டும்.

—போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி.

சுட்டி விற்பனையாகாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை. சுட்டியின் வளர்ச்சியிலும், கொள்கையிலும் ஆர்வமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உடனே தொடர்பு கொள்ளவும். — மேலாளர், 'சுட்டி'

FREE E - BOOKS , www.thamizham.net.,



போனஸ், பஞ்சப்படி எல்லாம் உழைப்பவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவை... காலங்காலமாக வன்மையான போராட்ட[illegible] வாயிலாகவே பெறப்பட்டு வருகின்றன. ஆனால் முதல்வர்கள் தொழிலாளர்களையும், அதன் பிரதிநிதிகளையும், பிச்சைக்காரர்களாக நினைக்கிறார்கள். தொழிற்சங்கவாதிகளும் பிச்சைக்காரர்களைப் போலத்தான் நடந்து கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக இங்கே ஆந்திர முதல்வரிடம் கெஞ்சிக் கொண்டிருப்பவர்கள் என். ஜி. ஓ. பிரதிநிதிகள்.

FREE E-BOOKS , www.thamizham.net.,

முன்பு எங்கள்
பிரதமர்
விமானி என்பதில்
சந்தேகமில்லை.

அதற்காய்
இப்பொழுதும்
பல நாடுகளுக்கு
பறந்துதான்
நிரூபிக்க வேண்டுமா?

—இளையமகன்

திரை அரங்கம்

வெறிச்சோடிக் கிடந்தது!
ஓடிக்கொண்டிருப்பது—
தேசிய விருது பெற்ற
படம் என்பதால்.

— செல்வி தாமரை

தேச பக்தன்

வீடு முழுவதும்
வெளிநாட்டுப் பொருள்கள்
கட்சிக் கூட்டத்திற்கு
கதர் சட்டை..

— கவிதைப் பிரியன்.

மந்திரி முழங்கினார்:
'மக்களின்
வாழ்க்கைப்பாதை
செழுமைப் படுத்தப்படும்'
மறுநாள்—
தெருவோரக் கடைகள்
அகற்றப்பட்டன!

— கே.வி.ராஜேந்திரன்.

கோயில்களில்
தமிழிலும் அர்ச்சனை
செய்யப்படும்...
பள்ளிகளில்
தமிழிலும் பாடம்
சொல்லித் தரப்படுமா...?

'மத்திய அரசு
அலுவலகங்களில்—
இந்தியில் கையெழுத்துப்
போடலாம்.'

ஒரு சந்தேகம்:
எங்கள் கைநாட்டுப்
பேர்வழிகளின்
விரல் ரேகைகள்
எந்த மொழி...?

—நா, தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# ரீகனின் பதவி பிழைக்குமா?



அரசியல் என்பது ஏறக்குறைய பரமபத விளையாட்டு போல. மேலே ஏணி உயர்த்தும். கீழே பாம்பு தள்ளி விடும். அமெரிக்க அரசியலில் ரீகனை பாம்பு — ஈரான் என்கிற பாம்பு — பதம் பார்த்து விட்டது! ஏற்கெனவே ஜிம்மி கார்டர் படாதபாடு பட்டு பணய கைதிகள் விஷயத்தில் ஈரானால் மிகவும் அவல நிலை எய்தியிருக்க, ரீகனையும் ஈரான் நோய் 'வாட்டர்கேட் விஷம்' வேகத்தில் தொடர்கிறது.

நடந்தது என்ன...?

அமெரிக்கப் பாராளுமன்றம் அனுப்பக்கூடாது என முடிவு செய்திருந்ததை மீறி ரீகன் ஈரானுக்கு ஆயுதங்களை அனுப்பினார். 'ஒரு கப்பல் அளவுகூட ஆயுதங்கள் அனுப்பப்படவில்லை' என்று ரீகன் டி.வி.யில் கூறினார். அனுப்பப் பட்டதோ பல விமானங்களில் இஸ்ரேல் வழியாக சி. ஐ. ஏ. மூலமாக...

இதில் எக்கச்சக்கமான லாபம். ஈரானுக்கு அனுப்பப் பட்ட ஆயுதக் குவியலின் அடக்க விலை 12 பில்லியன் டாலர்கள். அவை விற்கப்பட்ட விலை 50 பில்லியன் டாலர்கள். இந்தப் பணம் முழுவதும் ஸ்விஸ் பாங்கில் போடப்பட்டு விட்டது. ஆனால் அது எப்படியோ நிராகுவாவில் உள்ள அமெரிக்க ஆதரவு கூலிப்படையின ரான காண்ட்ரா ரெபல்கள் கணக்கில் சேர்ந்து விட்டது. இதற்கெல்லாம் அமெரிக்க சட்ட அனுமதியில்லை. அமெரிக்க பாராளுமன்ற காங்கிரஸுக்குத் தெரிவிக்கப் படவில்லை.

ஈரான் அருகில் இருக்கும் ஈராக் ரஷ்ய சார்பான நாடு. வலிமையுள்ள நாடு. சமீபத்தில் திடீரென்று பாய்ந்து ஈரானின் ஒரு நகரத்தைக் கலக்கிவிட்டது. ஆப்கானிஸ் தான் ஈரானின் எல்லையில் இருக்கிறது. எனவே ஈரானுக்கு ரீகன் ஆயுத சப்ளை செய்கிறார். செனட் மெம்பர்களுக்குத் தெரியாமலே இவையாவற்றையும் ரீகன் செய்கிறார்.

இந்தப் பணம் அமெரிக்க கைக்கூலிகள் கைகளுக்குப் போவது எப்படித் தெரிந்தது தெரியுமா? ஈரானே ரகசியத்தை 'லீக்' செய்துவிட்டது. பத்திரிகைகள் எல்லாம் ரீகனை கடுமையாகத் தாக்கிவிட்டன. ரீகனின் ஆலோசகர்கள், தலைமை பாதுகாப்பு அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வளவும் உதவி ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷிற்குத் தெரியாதாம்!

ரீகன் சினிமாவில் மட்டுமல்ல, அரசியலிலும் நடிகர் தான்.

— பாரத் ரவுஸ்.



FREE E - BOOKS , www.thamizham.net.,



மு. மேத்தாவும், சுஜாதாவும்,
பாரதிராஜாவும்
மக்களுக்கு எதிரானவர்கள்...

# அ. மார்க்ஸ்

## கூறுகிறார்...

பேரா. அ. மார்க்ஸ் இயற்பியல் துறை பேராசிரியர். நிறைய நூல்கள் எழுதியிருக்கிறார். 'புதிய கல்விக் கொள்கை' என்கிற இவரது நூல் மக்களிடம் நல்ல வரவேற்பையும், அரசின் கண்காணிப்பையும் பெற்றிருக்கிறது. எனவே தஞ்சை சரபோஜி கல்லூரியில் பணியாற்றிய இவரை திடீரென்று அரசு குடியாத்தத்திற்கு மாற்றல் தந்திருக்கிறது. மேலும் 17ஏ குற்றச் சாட்டும் சுமத்தியுள்ளது. இதற்கெல்லாம் அஞ்சாது இவரது எழுத்துக்கள், மக்கள் மத்தியில் பிரச்சாரம் இவையாவும் தொடர்கின்றன.

**சாதாரண வாசகனுக்கு எளிதில் புரிந்து கொள்ளும்படி முற்போக்குப் படைப்புகள் வருவதில்லையே...ஏன்?**

இன்றைய சமூகம் சிக்கலாயிருக்கிறது. இதனை விளக்குவது என்பதும் சிக்கல்தான். விஞ்ஞான நுட்பங்களை விளக்க வேண்டியிருப்பதால் செறிவோடு செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. விஞ்ஞான அறிவை வளர்த்துக்கொள்ள வாசகனுக்குப் பொறுமை தேவைப்படுகிறது. ஐன்ஸ்டைனின் தத்துவத்தை ஒரு சாதாரண வாசகன் முதல்வாசிப்பிலேயே புரிந்து கொள்ள முடியாது.

மார்க்ஸியமும் ஒரு விஞ்ஞானம்தான். இதை எளிதாய் புரிந்து கொள்ள வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம்? இதுதவிர, எல்லாவற்றையும் எளிமைப்படுத்திப் புரிந்துகொள்வது ஒரு சாம்பேறித்தனமாகும். மிகச் சாதாரண வடிவத்திலேயே திருப்தி அடைவது என்கிற மனோபாவத்தை ஆளும்வர்க்கம் திட்டமிட்டே உருவாக்குகிறது.

ஆனாலும்கூட இந்த அநீதிகளுக்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்கு செயல்படுகிற முற்போக்காளர்கள், இந்த சூழல்களை கணக்கில் எடுத்துக் கொண்டு மக்களுக்கு புரிகிற எளிய முறையில் தங்கள் கருத்துக்களை முன் வைக்க வேண்டியதுதான்.

மாஸ்மீடியா முற்போக்கு எழுத்தாளர்களிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களும் முற்போக்கு எழுத்தாளர்களை அங்கீகரிப்பதில்லை. ஒட்டுமொத்தமாக தர்க்கரீதியான தன்மையெல்லாம் மாஸ்மீடியா மூலம் அழிக்கப்படுகிறது. கருத்துக்கள் மக்கள் மத்தியில் போகாமல் தடுக்கப்படுகிறது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

**இன்றைய இலக்கிய அமைப்புகளின் செயல்முறைகள் ஆரோக்கியமானதா?**

இன்றைய இலக்கிய அமைப்புகளெல்லாம் தொலை நோக்கும், அரசியல் நோக்கங்களும் இல்லாமல் இயங்கும் மற்ற பொழுது போக்கு களங்களைப் போலத்தான் செயல்படுகின்றன. இவை சீட்டாட்டம் நடைபெறும் கிளப்புகளைப் போலத்தான். அதே சமயத்தில் முற்போக்குப் பார்வையில் தொடங்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் போன்ற அமைப்புகளும் தவறான அரசியல் பார்வைகளுடன் செயல்பாடு இன்றி தேக்கம் அடைந்திருக்கிறது. இந்தச் சூழலில் புரட்சிகரமான அரசியல் நோக்கத்துடனும், இறுக்கமான அமைப்பு வடிவத்துடனும், தியாக உணர்வுகளுடனும் கூடிய இளைஞர்களால் இயங்கும் சில அமைப்புகள் நம்பிக்கைத் தருகின்றன.

**இன்றைய முன்னணி எழுத்தாளர்களின் வெற்றிகள் நியாயமானதா?**

எழுத்து விற்பனை வெற்றி, வாசகர் மத்தியில் எந்த விதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை வைத்துத்தான் கணிக்க முடியும். இன்றைய முன்னணி எழுத்தாளர்கள் பலரும் மக்களை செயலூக்கமற்ற தன்மைக்கே இழுத்துச் செல்கிறார்கள். இருக்கிற அமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்கிறவர்களாக மக்களைத் தயாரிக்கும் பணியை இவர்கள் செய்கிறார்கள்.

மு. மேத்தாவும், சுஜாதாவும், பாரதிராஜாவும் இந்த வகையில் இந்தச் சமூக அமைப்பிற்குச் சாதகமானவர்களாகவும், கோடிக்கணக்கான அடித்தள மக்களுக்கு எதிரானவர்களாகவும் இருக்கிறார்கள்.

பேட்டி: புவி. உமாசந்திரன்.

---



**இந்த நாட்டிற்கும் கம்யூனிசம் வரத்தான் செய்யும்.**

**ஈ. வே. ரா. பெரியார்:**

கம்யூனிசம் ஒன்றுதான் உலக அமைதிக்கே, உலக மேம்பாட்டிற்கே உற்ற சாதனமாகும் என்ற அறிவு—அது சாத்தியமானது அதுவே உண்மையானது—என்ற அறிவு எல்லா நாடுகளிலும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து இருக்கிறது. அந்த சவால் இன்றில்லையானாலும் நாளை இந்நாட்டையும் கவ்வத்தான் போகிறது. ஆங்கிலேயரின் தந்திரமும், அமெரிக்காவின் அணுகுண்டும் கம்யூனிசத்தின் பரவலை இனியும் தடை செய்து கொண்டிருக்க முடியாது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி

*இந்திய மொழியில் வெளிவந்த அற்புதமான திரைப்படம் என்று எதைச் சுட்டிக் காட்டுவீர்கள்?*

இந்திய மொழியில் வந்துள்ளவற்றில் உலகத் தரத்தைச் சேர்ந்தது என்று சத்யஜித் ரேயின் 'பதேர் பாஞ்சாலி'யை மட்டுமே சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்ல முடியும்.

உலக சினிமாவுக்கும் இந்திய சினிமாவுக்கும் ஏறத்தாழ ஒரே வயதுதான். லூமியர் சகோதரர்கள் பாரிஸில் 1895-இல் தங்கள் முதல் படத்தை உருவாக்கிய ஆறு மாதங்களுக்கெல்லாம் சினிமா என்னும் நவீன அற்புதம் பம்பாயில் வந்து குதித்து விட்டது. இருப்பினும் 60 ஆண்டுகளுக்குப் பின்னர், எண்ணற்ற இந்திய மொழித் திரைப்படங்களுக்குப் பின்னர், 1956-இல் 'பதேர் பாஞ்சாலி' தோன்றிய போதுதான் இந்திய சினிமா உலகத்தரத்தை அடைந்தது. 'பதேர்பாஞ்சாலி'யுடன் சத்யஜித் ரே எடுத்த 'அபராஜிதவோ'வையும் (1956) 'அபூர்சென்சாரை'யும் (1959) இணைத்துப் பார்க்க வேண்டும். முப்படங்களின் ஒரு தொகுப்பு இது.

## தமிழிலும் நாலைந்து சத்யஜித்ரேக்கள்

இம் முப்படங்களில் அபு என்ற இந்தியச் சிறுவனின் வாழ்க்கை முழுமையாக விரிகிறது. வாழ்வின் சகல மேடுகளும் பள்ளங்களும் யதார்த்தமான பரிமாணங்களில் திரைக்கவிதையாக பதிவு பெற்றிருக்கிறது. காலம், மாற்றம், மரணம் இம் முப்பிரிகளை அற்புதமாக இழை பின்னி முழு வாழ்வையும் அதன் ஆழத்துடனும் அர்த்தத்துடனும் புதிர்களுடனும் நம் அனுபவத்தின் தளத்தில் விரிப்பதில் ரே என்னும் கலைஞன் அற்புதமான வெற்றி கண்டிருக்கிறார்.

இந்த முப்படங்கள்தான் இந்திய வாழ்க்கையை முதன் முதலாக உண்மையாகவும், நேர்மையாகவும், கலைபூர்வமாகவும் பதிவு செய்தன. இந்திய முகங்கள், நம் வாழ்வின் இன்னல்கள், நம் கிராமங்கள், நம் குடியிருப்புக்கள், நம் இயற்கையின் அற்புத அழகுகள், நம் பற்றாக்குறை, நம் கனவுகள், நம் உறவுமுறைகளின் உன்னதங்கள், முட்கள் எல்லாம் கலைபூர்வமான பதிவு பெற்றன. நம் பழமைகளும் நம்பிக்கைகளும் உன்னதங்களும் சரிவுகளும் பதிவு பெற்றிருக்கின்றன. உலக சினிமாவின் வரலாற்றில் இந்தியாவுக்கு உயர்ந்த இடத்தைத் தேடித்தந்த படங்கள் இவை. ரேயின் முயற்சிகள் இந்திய மொழிப்படங்கள் அனைத்தையும் தாக்கியுள்ளன. எண்ணற்ற இயக்குநர்

# ஜெ.பி.யின் சீடர்



ஸ்வாமி அக்னிவேஷ். யார் இவர்? சமீபத்தில் ஜனதா கட்சியைக் கலக்கியவர். பிறந்தது தெலுங்கு குடும்பத்தில். வளர்ந்தது ஒரிஸ்ஸாவில். படித்தது மத்திய பிரதேசத்தில். வாழ்வது கல்கத்தாவில். இவர் முழு இந்தியர் தானே...?

இவர் ஜெ. பி. யின் சீடராக இருந்து அவரது தத்துவங்களில் நாட்டம் கொண்டார். மிகத்தீவிரமாக கொத்தடிமை முறையை ஒழித்திட பணியாற்றி வருகிறார். கொத்தடிமையை ஒழித்திட அரசினை அணுகி உதவி கேட்கவில்லை. யாரையும் நம்பவில்லை. தன்னலமற்றுப் பணியாற்றி வருகிறார்.

இவர்மீது கடுந்தாக்குதல் நடத்தப்பட்டது. ஜனதா தலைவர்களே முன்னின்று இவரது ஆபிஸை சூறையாடினர். பைல்கள் மறைக்கப்பட்டு விட்டன. சின்னா பின்னமாகிவிட்டது இவரது அலுவலகம். எந்த அலுவலகம் தெரியுமா? கொத்தடிமைகளுக்கு புனர்வாழ்வு தந்த இல்லம் அது.

அதுமட்டுமல்ல. இவரை ஜனதா கட்சியிலிருந்து நீக்கிவிட பலர் முயன்றார்கள். இவர்மீது புழுதிவாரி இறைக்கப்பட்டது. ஏன்...? இவர் செய்த குற்றம் என்ன.?

ஜனதா கட்சித் தலைவர் தேர்தலில் இவர் சந்திரசேகரை எதிர்த்துப் போட்டியிட்டார். இதுதான் இவர் செய்த மன்னிக்க இயலாத குற்றம். ஜனதா கட்சியில் ஜனநாயகம் இந்த நிலையிலிருக்கிறது.

அக்னிவேஷ் பலரைப் பிடித்து ராஜீவை சந்திக்க முயன்றாராம். கொத்தடிமை பிரச்சனையை ராஜீவ் இவரிடம் பேச எடுத்துக் கொண்ட நேரம்: அரை நிமிடம். எதற்கு அரை நிமிடம்? இவர் கொடுத்த மனுவை வாங்கிக் கொண்டு உடனே சென்றுவிட்டாராம்.

பிரதமர் ராஜீவுக்கு ஏழை கொத்தடிமைகள்மீது என்னே கருணை?


— டி. ராஜசேகர்

* * * * * *

களின் மனதில் ரே நிறுவிய தரம் இன்றும் ஒரு கனவாகவும் ஆதர்சமாகவும் இருந்து கொண்டு வருகிறது.

தமிழ் மொழியிலும் நாலைந்து சத்யஜித் ரேக்கள் இருந்து வருவதாக அவ்வப்போது அறிவிக்கப்படுகிறது. இருக்கலாம். யார் இல்லை என்று சொல்ல முடியும்? ஆனால் ரேயின் தரத்தைச் சேர்ந்த ஒரு படங்கூட இந்த 'உன்னத'ங்களால் இன்று வரையிலும் உருவாக்கப்படவில்லை என்பதை நாம் நிச்சயமாக கூற முடியும்.


FREE E- BOOKS , www.thamizham.net.,






FREE E - BOOKS , www.thamizham.net.,

11-12-86 அன்றைய செய்தித்தாள்களில் உங்களுக்கு எரிச்சல் ஏற்படுத்திய செய்தி எது...?



**ஏ. எம். சயீத் வழக்கறிஞர், மயிலாடுதுறை.**

இன்றைய தினகரன் 2வது பக்கத்தில் 'ஆசிரியர் பயிற்சி மாணவி மர்ம சாவு' கிணற்றில் பிணமாக மிதந்தார் என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தி எரிச்சலை ஏற்படுத்தியது. 19 வயதுள்ள அருள்மொழி பிணமாக மிதந்ததற்கு தற்கொலை காரணமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தற்கொலை கோழை உணர்வின் உச்சக்கட்டம். விலை மதிப்பற்ற உயிரைப் பாதுகாப்பது மனிதனின் கடமையாகும். இதில் தவறிழைப்பவர்கள் குற்றவாளிகள்.

**பொன். சரவணகுமார், கர்நாடகா.**

துப்பாக்கி சூடு. ஒருவர் சாவு. தும்கூரில் (கர்நாடகத்தில்) ஆங்கில நாளிதழ் நிருபர் எழுதிய சிறுகதைக்கு அப்பாவி ஒருவன் சாவு. மத அரக்கனின் திருவிளையாடல்.

**எம். என். நல்லசுவாமி, துணைப் பேராசிரியர். கரட்டடிப்பாளையம்.**

மதுரையில் தபால் ஆபிசில் நடந்த வெடிகுண்டு விபத்து எனக்குள் எரிச்சலை ஏற்படுத்தியது. சில சுய நலமிகளின் திட்டமிடப்பட்ட செயலால் பொது மனிதர் ஒருவரை பலிவாங்கி விட்டது. இதற்குக் காரணம் நமது நாட்டில் உள்ள புலனாய்வுத் துறையின் கவனக்குறைவு தான்.

**மிஸ். மேரி லீலா, நாகர்கோயில்.**

திருமணம் ஆன 20 நாளில் வரதட்சணைக் கேட்டு கொடுமைப் படுத்தியதால் புதுப்பெண் தற்கொலை!

பெண்ணின் உறவினர்கள், "வரதட்சணை கேட்டு அவளது மாமனாரும் மாமியாரும் கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் அவள் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து விட்டதாகக் கருதுகிறோம். இதுபற்றி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுங்கள்..." எனக்கூறியுள்ளனர். என்னதான் பணப்பேராசை இருந்தாலும் கொஞ்ச நாளாவது வாழ விட்டிருக்கக்கூடாதா?



**பா. இறையரசன், தஞ்சாவூர்.**

காலத்தாழ்வாக காலை 7.30 மணிக்கு 'தினமலர்' நாளிதழ் வந்து விழுந்தது. கடைசிப் பக்கத்தில் கருணாநிதியை விடுதலைச் செய்யக் கோரி பஸ் மறியல், போராட்டம், சிறை. சிறைச் செல்லத் துணிந்துதானே கருணாநிதி சட்ட எரிப்பில் ஈடுபட்டார். ஆயிரக் கணக்கில் தொண்டர்கள் சிறையில் இருக்கும் போது, தலைவர் சிறை செய்யப்பட்ட உடனே விடுதலை செய்யவேண்டும் என்பது போராட்டக் கோரிக்கையை, கொள்கையை மறந்து துறந்து மண்டியிட்டு மன்னிப்பு கேட்பதாகாதா? தொண்டர்களுக்கு ஒரு நியாயம் தலைவர்களுக்கு ஒரு நியாயமா?—என்று எரிச்சலாக இருந்தது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இனி — இவை இருபது

இதோ சாராயக்கடை
ராயல் பூட்டான் இன்றே கடைசி
சாமியே சரணம் ஐயப்பா
நடிகையின் ரசிக மன்றம் திறப்பு விழா
கிராமப் புறங்களில் கடும் வறட்சி
புலூபிலிம் பார்த்தவர்கள் கைது
நாடெங்கும் மூளைக் காய்ச்சல்
பிரார்த்தனைக் கிளப் கவனிக்க
பஞ்சாபில் 20 பயணிகள் படுகொலை
வறுமையை நீக்க முடியாத 10 மந்திரிகள்
பதவியிழப்பு
சட்ட எரிப்பு பதவி பறிப்பு
பிரதமர் டெல்லி பயணம்

பிரதமர் வெளிநாடு பயணம்
முதல்வர் டெல்லி பயணம்
காமவெறி பிடித்த கன்னிகள் —
ஞாயிறு காலைக் காட்சி
வானொலி காந்தி அஞ்சலி —
ஏழையின் ஆன்மிகம் ரொட்டித் துண்டு
தபால் கட்டண உயர்வு
திருப்பதி உண்டியலில் முதலைக் குட்டி
இப்போது இந்தி திணிப்பு இல்லை
புதிய கல்வி — ஆங்கிலம், இந்தி பாடமொழி
அந்த நடிகையின் மலரும் நினைவுகள் —
சிறப்பு நிகழ்ச்சி தொலைக் காட்சி தொகுப்பு
கொடிகள் முழுக்கம்பத்தில் —
கொள்கை அரைக் கம்பத்தில்

— பூங்கணியன்

இரவல் கார்டூன்




FREE E - BOOKS, www.thamizham.net.,
நன்றி: தி ஜெர்மன் ட்ரிப்யூன். அனுப்பியவர்: இ. விமலன்.

**பொதுவாழ்க்கை இழிந்து போனது ஏன்?**

'ஜனநாயகம்' என்ற கவர்ச்சிகரமான சொல் நம் அரசியல் வாதிகளையும் அவர்கள் வாயிலாக மக்களையும் பீடித்துக் கொண்டதுதான் இந்நிலைக்குக் காரணம். முன்பு மதவாதிகள் சமூகத்தை இழிவுபடுத்தினார்கள். இன்று அவ்விடங்களில் அரசியல்வாதிகள் அமர்ந்திருக்கிறார்கள். ஆட்சியைப் பிடிப்பதுதான் அரசியல்வாதிகளின் அடிப்படை லட்சியமாகிவிட்டது. அதற்காக எந்தவழியையும் பின்பற்ற அவர்கள் தயங்குவதில்லை. ஆகவே நீதி, நேர்மை, நியாயம் போன்ற சொற்கள் அர்த்தமற்றவையாகிவிட்டன.

உண்மையையும் உழைப்பையும் உணர்த்தவேண்டிய சமய வாதிகள் புகழுக்கும் அதிகாரத்திற்கும் பணத்திற்கும் அடிமையாகிவிட்டார்கள். இந்த அரசியல் வாதிகளையும் சமயவாதிகளையும் மக்கள் பின்பற்றுவதால் என்றுமில்லாத அளவுக்கு நம் சமூகவாழ்க்கை இழிந்து போய் விட்டது.

# கம்யூனிசம் பிரபலமான கனவு

## எம். வி. வெங்கட்ராம்

**ஒருபுறம் சாமியார்களும் மறுபுறம் ஆபாசப் பத்திரிகைகளும், படங்களும் போட்டி போட்டு வளர்கின்றனவே?**

ஒருவேளை சாமியார்களே ஆபாசப்பத்திரிகைகளும், படங்களும் பெருகக் காரணமோ என்னவோ! ஆன்மீக முன்னேற்றத்திற்கு செக்ஸ்-உம் ஒருவழி என்று கூறும் ரஜனீஸை நாம் 'ஆச்சார்யா' என்று வழிபடுகிறோமே... தங்கள் பேச்சு மக்களை எட்டவேண்டும் என்பதற்காக ஆபாசப் பத்திரிகைகளில் ஆபாசப் படங்களின் இடையே தங்கள் பேட்டிகளும் செய்திகளும் வெளியாவதற்கு இந்தச்சாமியார்கள் அனுமதிக்கிறார்கள். இப்படிப்பட்ட விளம்பர மோகம் சாமியார்களையும் வளர்க்கிறது. ஆபாச படங்களையும் வளர்க்கிறது.

**இந்திப் பிரச்சனைபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நான் விடுதலைக்கு முன்பே ஹிந்தி 'விசாரத்' பட்டம் பெற்றவன். எனக்கு இந்தியின்மீது வெறுப்பு கிடையாது. ஆனால் இந்தியை ஆட்சி மொழியாகவோ, தொடர்பு மொழியாகவோ கொள்ள வேண்டும் என்ற அதிகார வெறியை—இந்தித் திணிப்பை—வெறுக்கிறேன். மிகப்பெரிய ஜனநாயகவாதி என்று கருதப்படுகிற நேரு கூட இந்தி பற்றிய தன் வாக்குறுதியை அரசியல் சட்டத்தில் சேர்ப்பதற்கு இணங்க வில்லை. இப்போது



FREE E - BOOKS , www.thamizham.net.,

ராஜீவும் அவ்வாறே நடக்கிறார். இவர்களின் சொல்லும் செயலும் வேறு வேறாக இருக்கின்றன. தொடர்ந்து இந்தி மாநிலத்தவரே பிரதமர் பதவிக்கு வருவதால் அவர்கள் தங்கள் தாய்மொழியைப் பரப்ப முனைகிறார்கள். ஆனால் தேச ஒருமைப்பாட்டைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை. நேரு, இந்திரா இவர்களைவிட ராஜீவ் இந்தியை subtile ஆகத் திணிக்கிறார். இந்தி படிப்பதுதான் தேசபக்திக்கு அடையாளம் என்று இந்திக்காரர்கள் கூறினால், தமிழ் படிப்பதே தேசபக்திக்கு அடையாளம் என்று நாம் ஏன் கூறக்கூடாது?

**கம்ப்யூட்டர், ஏவுகணை என்றெல்லாம் சாகசம் புரியும் இன்றைய மனிதனின் அறிவுலகம் பற்றி...**

ஹாலிவுட்டில் ஒளி உமிழும் ஆர்க்லெட்டுகளின் வெளிச்சத்தில் புகழ்பெற்ற ஓர் அரசியல்வாதி (ரீகன்) ஆகாயத்தில் மின் ஆயுதநிலையம் அமைக்கவும், ஸ்டார் வார்ஸ் பற்றியும் யோசிக்கிறார் என்றால் மனிதஜாதிக்கு அறிவு அதிகமாகி விட்டது என்றா எண்ணுகிறீர்கள்?

**தேர்தல் முறையை நாம் சரியாகப் புரிந்து கொண்டோமா?**

தேர்தல் முறைக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்க்கே அதன் அர்த்தம் புரிந்திருக்காது. நமக்கு எங்கே புரியப்போகிறது? எப்படியோ தேர்தல் முறை என்று ஒன்று வந்தாகிவிட்டது. இனி புரிந்து கொள்வதற்குப் புரிந்து கொள்ளாததற்கும் என்ன இருக்கிறது. ஒரு நேருவின் ஆட்சிக்குப் பதிலாக, ஒரு வல்லபாய் படேலின் ஆட்சி நமக்கு வாய்த்திருந்தால் இந்த நாடு உலகின் மூன்றாவது சூப்பர் பவர் நாடாக உயர்ந்திருக்கும்.

**இந்தியா இன்னமும் கம்யூனிஸத்தைச் செரித்துக் கொள்ளாததைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்தியா வறுமையைச் செரித்த நாடு. வயிற்றுப் பாட்டுக்கே புழுவாக நெளிவதும், பூச்சியாக ஊர்வதும் இந்நாட்டு மக்களுக்கு யுகம் யுகமாகப் பழகிப்போன விஷயங்கள். இந்தப் பழக்கம்தான் கம்யூனிசம் வளராமல் போனதற்குக் காரணம். மார்க்ஸ் கண்ட கம்யூனிச நாடு உலகில் எங்குமே இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அரசை ஒழித்து மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் நிலை எங்கே இருக்கிறது. இந்நிலையில் கம்யூனிசம் ஒரு பிரபலமான கனவுதான். ஆன்மீகவாதிகளின் நிறைவேறாத லட்சியம்போல் இதுவும் ஒரு நிறைவேறாத கனவுஇந்தியாவைப் பொறுத்தமட்டில் நாடுதழுவிய சக்தி வாய்ந்த ஒரு தலைவனை அக்கட்சி(கள்) பெறவில்லை. சிறு சிறு போராட்டங்களோ, திடீர்க் கொலைகளோ கம்யூனிசத்தை வளர்த்து விடாது. நாடுதழுவிய போராட்டத்தை அக்கட்சியால் நடத்த முடியும் எனில் நானும் ஆயுதம் ஏந்தத்தயார்.

பேட்டி: என். பிருந்தா சாரதி, கு. பெ. செந்தில்வேலு

FREE E - BOOKS , www.thamizham.net.,

சீக்கியர்களின் தேசப்பற்றை அப்படி யாரும் எளிதில் சந்தேகப்பட்டுவிட முடியாது. ஆனாலும் சந்தேகப்படுவதற்குரிய சாத்தியக்கூறுகளும் சரித்திரத்தில் இல்லாமல் இல்லை.

1857 ஆம் வருடம் மே மாதம் 10ஆம் தேதி இந்தியா முழுவதும் சிப்பாய்ப் புரட்சி மூண்டபோது, சீக்கியர்கள் அதில் சேர்ந்து கொள்ளவில்லை. அதுமட்டுமா? அவர்கள் வெள்ளையர்களுக்கு ஆதரவு காட்டவும் செய்தனர். அங்கே அவர்கள் தேசப்பற்றைச் சந்தேகிக்கிறவர்கள் உண்டு.

சிப்பாய்ப் புரட்சியில் சீக்கியர்கள் ஏன் பங்கேற்கவில்லை என்பதற்குச் சரியான சில காரணங்கள் உண்டு. 'வியாபாரம் நடத்த வந்த வெள்ளையர்கள் அரசியல் நடத்தத் தொடங்கி' நாடுபிடிக்கும் வேட்டையில் இறங்கி, ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின்பே, அவர்களால் சீக்கியரை வெல்ல முடிந்தது. இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களில் சீக்கியர்கள்தான் 1849 வரை வெள்ளையரோடு போராடியவர்கள் என்பது வரலாற்றுண்மை.

1845 இல் ஒருமுறையும் 1848 இல் மறுமுறையுமாக இருமுறை வெள்ளையரோடு பெரும்போர் நடத்தி, இறுதியில் 1849-இல் சீக்கிய வீரர்கள் தோல்வியைத் தழுவினர். அப்போது பஞ்சாபில் இருந்த பல முகமதியர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தனர். குறிப்பாக பஞ்சாபில் இருந்த முகம்மது இமாமுதின் சீக்கியருக்கு எதிராக, முகமதியர்களைப் போராடும்படி தூண்டினார். (ஹெச். சி. பி. குக் த சிக் வார்ஸ், பக். 194.)

1849 இல் சீக்கியர்கள் தோல்வியடைந்தபோது, பகதூர் ஷா, பீரங்கியில் 21 குண்டுகள் முழக்கி, வெள்ளைக்காரர்களின் வெற்றியைக் கொண்டாடினர், நாட்டில் உள்ள இந்துக்களும், முஸ்லீம்களும் சீக்கியர்களின் தோல்வியைக் கொண்டாட வேண்டுமென்ற உணர்வு தூண்டப்பட்டது.

இந்த ரணங்களை 8 ஆண்டுகளில் சீக்கியர்கள் மறந்திருக்க முடியாது. மேலும் 1857 சிப்பாய்புரட்சி மாட்டுக் கொழுப்பையும், பன்றிக் கொழுப்பையும் தடவக்கூடாது என்று மத அடிப்படையில் இந்து, முஸ்லீம் சிப்பாய்கள் தொடக்கிய போராட்டமே என்பதையும் மறுக்க முடியாது. அதனை முதல் விடுதலைப் போர் என்று நம் சரித்திர ஆசிரியர்கள் வருணித்தாலும் அதன் பின்புலம் 'மதம்' தான், என்பதை மறுக்க முடியாது.

இப்படி, ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் வலுவடைந்ததற்கு, மதமே பல நேரங்களில் காரணமாயிருந்துள்ளது என்பது, நம் பாடப்புத்தகங்களில் விடுபட்டுப் போயிருக்கும் வரலாறு.

— சுபவீ.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# கல்கண்டு ஜூனியர் பதில்கள்

கேள்வி பதில்களை முதன்மைப் படுத்தி பத்திரிகை நடத்தியவர்கள்: வடக்கே பாபுராவ் படேல். தெற்கே தமிழ்வாணன். பாபுராவின் வெற்றிக்கு பொறுப்பற்ற நகைச்சுவையும், நமத்துப்போன ஆன்மீகமும், சமரச சன்மார்க்க அரசியலும், சினிமாவும் துணைபுரிந்தன. த. வாணனுக்கு உதவியவை: மர்ம நாவல்கள். ஆழமற்ற அகலப்படிப்பறிவு. சுய புகைப்படங்கள். கறுப்புக் கண்ணாடி.

தமிழ்வாணனின் நகலாக இருக்கும் ஜூனியர், பத்திரிகை உலகின் கொல்லைப்புற வழியாக நுழைந்தவர். சமூகத்தின் அழுத்தமான தாக்கங்களுக்கு உட்படாதவர். சோதனை முயற்சிகளுக்கு இதயத்திற்குள் இடந்தராதவர். எனவே, ஜூனியரின் பதில்களில் ஆழமான வீச்சுக்களைப் பார்க்க இயலுவதில்லை.

பதில் சொல்வதில் உலோகக்காலப் பழமை. பயன்படுத்துவது தேய்ந்துபோன சொற்களை. சிக்கலாத ஆனால் நவீனப்படுத்தாத மொழி நடை. கேள்வி கேட்கிற வாசகனின் மூளையை வளர்க்காத ஆனால் திருப்திப் படுத்துகிற வன்மை. இவை யாவும் ஜூனியரின் சிறப்பம்சங்கள்.

வாராவாரம் ஒரு பக்கக் கட்டுரைகள் என்கிற பெயரில் லேனா தமிழ்வாணன் குருபீடத்தில் அமர்கிறார். இது வாசகனை உயர்த்துகிற முயற்சியாம். மேலும் வாசிப்பவனை மேம்படுத்த பதில்கள் பகுதியில் முயற்சி மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக:

1. பாக்கியராஜின் அடுத்தப் படத்தின் பெயர் என்ன?
   முதலில் முந்தானை. அடுத்து தாவணி. அடுத்து?
   சை! இந்த கற்பனையே வேண்டாம் நமக்கு!
   (09—08—84 கல்கண்டு)

2. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உடனடியாக செய்ய வேண்டியது என்ன?

   மல்லிகைப் பூ விற்பனை செய்யத்தடை (12-12-85)-

கம்யூனிசம் வருமா?

வராது. வயிற்றுக்கு சோறு கிடைக்கலாம். மனதிற்கு நிறைவு கிடைக்குமா? (07-08-86)' மழை வருமா வராதா? என்று கேட்டதற்கு பதில் கூறியது போல பொறுப்பற்ற பதில். இவரிடம் தமிழக, இந்திய, உலக அரசியல் பற்றி வாராவாரம் கேட்கப்படுகிறது. இவை கல்கண்டு வாசகனின் அறிவுக் கூர்மைக்குச் சான்று. →

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பதில்கள்

**உங்கள் பத்திரிக்கை அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்... ஆர். கே. நாராயண்.**

'இண்டியன் தாட்' என்று ஒரு மாதப் பத்திரிக்கையை 1940-ல் ஆரம்பித்தேன். நாலு மாதம் கொண்டு வந்தேன் விலை ரூ. ஒன்று. விற்பனை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் பத்திரிகையை நிறுத்தி சந்தா கட்டியவர்களுக்கு பணத்தைத் திருப்பி அனுப்பினேன்...

**? காரணம் என்ன...?**

! பத்திரிக்கை வேலை, சொந்த எழுத்தைச் சாப்பிடும் போல இருந்தது...

**தமிழகக் கவிஞர்களின் நிலை பற்றி...**

**காடுவெட்டி:**

தமிழ்நாட்டில் கவியென்று சொல்லிக் கொள்கின்றவர்களில் பெரும்பாலோர் ஆர்மோனியப் பெட்டியின் மெட்டுக்கு பலியாகிப் போனவர்கள். சினிமாக் கவர்ச்சி; காசு; அது கொடுக்கும் விளம்பரம் ஆகியவற்றுக்கு அடிமைப்பட்டு போனவர்கள். ஆனால் பேசும் போதும், எழுதும் போதும், கவியின் உயர்ந்த இறுமாப்போடும்—தன்மானத்தோடும் பேசுகிறார்கள். இவர்களது கவிதை போலியாக இருப்பது போலவே இவர்கள் ஆவேசமும் கூச்சலும் போலியாகவே இருக்கிறது.

**கூட்டி வாசகர் இயக்கம்:**

**விண்ணப்பங்கள் அனுப்பியவர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.**

**— வாசகர் இயக்க அமைப்பாளர்**

மேலும் நகைச்சுவை என்ற பெயரில் கிச்சுகிச்சு முயற்சிகளும் செய்யப்படுகின்றன. சினிமாவைப் பற்றிய புலனாய்வுகளும், பிரபல மனிதர்களைப் பற்றிய அகழ்வாராய்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

லேனா என்கிற தனிநபர் அற்புதமான மனிதராம். தேர்ந்த நிர்வாகியாம். வாசகனிடம் சுயபிம்பத்தை வளர்ப்பதில் வல்லவராம். கடுமையான விமர்சனங்களை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்பவராம். இவை செவி வழிச் செய்திகள். இந்த செய்திகள் உண்மையானால் லேனா தமிழ்வாணன் மேலும் வளர்வார். அவரது இலட்சக்கணக்கான வாசகர்கள்...? —நா. தென்னிலவன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

ரத்தின வேலு தன் காட்டுக்குப் போனார். ஆளுயரத்திற்கு வளர்ந்த சோளப் பயிர். காட்டைச் சுற்றிப் பார்க்கும்போது மூன்று ஆடுகள் சோளப் பயிரை கடித்து நாசமாக்கிக் கொண்டிருந்தன. ரத்தின வேலு தன் ஆட்களை விட்டு ஆடுகளைக் கட்டிப் போட்டார். அவருடைய மீசை துடித்தது. கோபத்தால் மேனி கொதித்தது.

எழுத முடியாத கெட்ட வார்த்தைகளில் முதலில் ஆடுகளைத் திட்டினார். பிறகு மூன்று ஆடுகளும் யாருடையவை என்று விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

உள்ளூர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ராமனுக்கும் - அடுத்த தெரு தங்கவேலுவுக்கும் - பெரிய பண்ணையார் பரமசிவத்துக்கும் அந்த ஆடுகள் சொந்தமானவை.

ரத்தின வேலு தனது ஆட்களை விட்டு ராமனை இழுத்து வரச் செய்தார். அவனது ஆட்டை ஒன்றுமே செய்யாமல் அவிழ்த்து விட்டு, ராமனை மட்டும் கட்டிப் போட்டு நையப்புடைத்தார்.

பிறகு தங்கவேல் என்கிற தனது ஜாதிக்காரருக்குத் தகவல் சொல்லி அனுப்பி விட்டு, அவரது ஆட்டை சக்கையாக அடித்துத் துரத்தி விட்டார்.

அதன், பிறகு பெரிய பண்ணை பரமசிவத்தின் ஆட்டைத் தானே அன்புடன் நீவிக் கொடுத்து - அரவணைத்து - அதைத் தன் கைளால் தூக்கிக் கொண்டு பங்களாவுக்குப் பயணமானார்.

காத்திருந்தார், பண்ணையார் வரும் வரை. வந்தவுடன் கைகூப்பித் தொழுது விட்டு பயபக்தியுடன் அசடு வழிய அவருக்கே உரித்தான சிரிப்பை உதிர்த்தார், ரத்தின வேலு.

"என்னடா, ரத்தினம், என்ன விஷயம்?" என்று பண்ணையார் மரியாதைவுடன் கேட்க ர்த்தினவேலு சொன்னார் :-

"நம்ம ஆடு ரொம்ப புத்திசாலித்தனம் உள்ளதுங்க... எப்ப மேய்ந்தாலும் என்னட காட்டுக்குத்தான் வருமுங்க.. வேறு யாராவது தெரியாதவங்க பார்த்திருந்தாக்க... என்ன ஆயிருக்கும்...? அதான் ஆட்டை நானே தூக்கி வந்தேனுங்க..."

"சரி சரி...போ, சமத்துத்தான்...", என்றார் பண்ணையார். புளகாங்கிதத்துடன் ரத்தினவேலு அங்கிருந்து புறப்பட்டார்.

'பண்ணையாரின் ஆடு மே' என்று கத்தியது.

யு. கே. செங்கோட்டையன்.

## ஒரு மனிதன், ஒரே மனிதனா?



FREE E - BOOKS , www.thamizham.net.,

மாரடைப்பு வராமலிருக்க

# விட்டமின் - ஈ - E

நமக்கு அதிகம் தெரியாத விட்டமின் 'ஈ' நமக்கு பல உடல் தொல்லைகளில் கேடயமாகும்.

விட்டமின் ஈ, இல்லாவிட்டால், விட்டமின் 'எ'யும், 'சி'யும் அழிந்துவிடும். இவ்விரு விட்டமின்களையும் பாதுகாப்பது விட்டமின் ஈ-இன் வேலை.

ஃ ஆரோக்கியமான இதயமும், ரத்த ஓட்டமும் இயங்க விட்டமின் ஈ உதவுவதால், மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பை இது குறைக்கிறது.

ஃ விட்டமின் ஈ உடலில் சேரும் போது நீரழிவு நோய் கட்டுப்படுகிறது; சதை வலுவடைகிறது.

ஃ விட்டமின் ஈ குறைவால் ஆண்களுக்கு மலட்டுத்தனம் ஏற்படுகிறது; செக்ஸ் வாழ்வைப் பாதிக்கிறது. சோம்பேறித்தனம், பலவீனம், கவனக்குறைவு இவை இக்குறைபாடின் வெளிப்பாடுகள்.

ஃ வயதானவர்களுக்கு விட்டமின் ஈ மிகவும் தேவை. சீக்கிரம் முதுமை அடைவதை இது தடுக்கும்.

ஃ விட்டமின் ஈ-ஐ திடீரென மிக அதிக அளவில் சேர்க்கக்கூடாது. இதனால் ரத்த அழுத்தம் அதிகரிக்கும். சீக்கிரம் ரத்தம் உறைவதை விட்டமின் 'ஈ' தடை செய்வதால், ரத்தம் உறையா கோளாறுடையவர்கள் இதனை அதிகமாகச் சேர்க்கக்கூடாது.

ஃ சராசரி மனிதனின் ஒரு நாளைய விட்டமின் ஈ தேவை 100 அ. அ. (அனைத்துலக அலகு : 1. யு)

மாவு எந்திரத்தில் அரைக்கப்படும் தானியங்கள் விட்டமின் ஈ-ஐ இழக்கின்றன. மைதா ரொட்டி, தீட்டிய அரிசி இவை விட்டமின் ஈ-ஐ இழந்தவை.

விட்டமின் 'ஈ' மலிந்துள்ள சிறந்த பொருள் பட்டாணிக்கடலை. இதைத் தவிர கோதுமை ரவா, புழுங்கலரிசி, முட்டை, சூரியகாந்தி விதை, இவற்றிலும் நிறைய உண்டு. எண்ணெய் கொழுப்பிலே கரையக் கூடியது விட்டமின் 'ஈ'. எண்ணெய் பதார்த்தங்கள் அதிகம் உண்டால் இது அழிந்து விடும். — சித்தன்.

(அடுத்து: நமது காந்த மருத்துவம்)

திருமணம், சொத்து விவகாரங்கள், உடல் நலப் பிரச்சனைகள், விரிவான ஆலோசனைகள் பெற எழுதவும். ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00. எம். வெங்கட், 27பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம் அம்பத்தூர், சென்னை-600 053. ADVT



FREE E - BOOKS , www.thamizham.net.,

# குமுறல்

சீர்காழி நகரின் புகழ் பெற்ற பள்ளிகளில் சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியும் ஒன்று. இங்கு சுமார் 600 மாணவர்கள் தினம் சத்துணவு சாப்பிடுகின்றனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் சாப்பிட தட்டுகள் இல்லாது தினம் வாழை இலை 10 பைசா கொடுத்து கடைகளில் வாங்கிக் கொண்டு பள்ளிக்குச் செல்கின்றார்கள். கடந்த மூன்றரை மாதங்களாக இது நடைபெற்று வருகின்றது.

குறைந்த பட்சம் 200 பேர்கள் வாழை இலைகளை வாங்கிச் செல்வதாக இருந்தாலும் ரூ. 20 ஆகிறது. கடந்த நூறு நாட்களுக்கு கணக்கிட்டு பார்த்துக் கொள்ளுங்கள்

காழி. க. அருள்மொழி,
சீர்காழி-609116.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வரும் டூரிஸ்ட் பஸ்களையும். வேன்களையும் மேல சித்திரை வீதி, வடக்குச் சித்திரை வீதிகளில் நிறுத்துவதற்கு ஒவ்வொரு டிரைவர்களும் காவல் துறையினருக்கு ரூ. 5 முதல் 10 வரை தர வேண்டியுள்ளது. அதுவும் இந்த ஐயப்பன் சீசனில் நாள் ஒன்றுக்கு விடிய விடிய நூற்றுகணக்கான வண்டிகள் வருகின்றன. இப்படி ஆயிரக்கணக்கில் வரும் வருமானம் தனிப்பட்ட முறையில் டிராபிக் போலிசாரைச் சேர்கிறது. இதனை கோயில் நிர்வாகமோ, மதுரை மாநகர் ஆட்சியோ இன்றுவரைக் கண்டு கொண்டதே இல்லை. பொது மக்களின் பணம் எப்படிச் சீர் அழிகிறது பாருங்கள்!

திருமதி. சுகுணா மதுரை
மூர்த்தி-625001

---

**குட்டி சந்தா :** 12 இதழ்கள் அஞ்சலில் பெற விரைவில் ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

**முன் இதழ்கள் :** சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 11. 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும் இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் தபாலில் உங்களுக்கு உடனே வந்து சேரும். 50-வது இதழ் 0.75 காசு

**சுட்டி இலவசம் :** சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்கள், உறவினர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டி வரவில்லை :** சுட்டி ஒழுங்காக வந்து சேரவில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைப்பட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15-ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம், வேறுவழியில்லை.

**ஏதாவது செய்யுங்களேன் :** புதியவர்களை சந்தாதாரராக்குங்கள் அறியாதவர்களுக்கு சுட்டியைப் பற்றிக் கூறுங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை அறிமுகப் படுத்துங்கள். பத்து இதழகளை வாங்கி நீங்களே நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டு விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்

எல்லாத தொடர்புகளுக்கும் :

AP 638 H பிளாக் அண்ணா நகர். சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# [redacted]

சுட்டி இதழைப் பெற்றதும் இன்ப அதிர்ச்சி கொண்டேன். தயவு செய்து விலையையும் சிறிதேனும் உயர்த்துங்கள். எங்களுக்காக நீங்கள் சுட்டி வடிவத்தை மாற்றும்போது நாங்களும் எங்கள் பங்குக்கு ஏதாவது செய்ய வேண்டாமா? எனவே விலையை உயர்த்துங்கள். ஐந்து காசாவது அதிகம் கொடுத்தால்தான் என் மனம் சமாதானமடையும்.

— வ. சந்தகுமார்
வெள்ளலூர்-641111.

தமிழக மக்களிடம் ஈழப் போராளிகள் நடந்து கொள்ளும் முறை பற்றி இன்குலாப் கூறியுள்ள செய்தி புதியதாகவும் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வராத செய்தியாகவும் இருந்தது. ஆனால் தி.மு.க.வின் சட்ட எரிப்பு என்கிற போலித்தனமான போராட்டத்தை பாராட்டிய விதம்தான் வருத்தத்தைத் தந்தது.

— இளந்தியன்.
சுந்திர பெருமாள் கோவில்.

புதுக்கவிதைகள் குறைந்து விட்டனவே... ஏன்? பதில்கள் பகுதி சிறப்பாக இருக்கிறது. ஒவ்வொரு இதழிலும் பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டுங்களேன்.

— வ. பா. இராசேந்திரன்.
வளவனூர்.

அட்டையில் இருந்த சசிபகாயாவின் வரிகள் அபாரமானவை. ஒவ்வொரு குடிமகனுக்கும் இருந்தாகவேண்டிய உணர்வு அது.

— அ. மு. அப்பாஸ்,
சேலம்-636005.

வெளிநாடு சென்று திரும்பும் ராஜீவ்காந்தியும், எம்.ஜி.ஆரும் மந்திரிகளை மாற்றுவதில் காட்டும் அக்கறை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மாற்றுவதில் இல்லை என்று சொல்கிற பக்கம் கவிதையா?

இரணியல் கலை,
சென்னை-57

மசாலா மன்னர் சாவி பதில்கள் பற்றிய விமர்சனம் கூர்மையாக இல்லை. சுந்தர ராமசாமி அவர்களின் பக்கங்கள் சுவையாக மிகுந்திருந்தன.

அன்புடன் மெயில்குமார்
வேமாபுரம்.

சினிமாக்காரர்களின் சாமுத்ரிகா லட்சணங்களை ஜாலியாய் அலசிக்கொண்டிருக்கும் 'சாவி'யை உறைக்கும்படி குட்டியிருக்கலாம்.

— பேனா வாணன்,
ஐதராபாத்.

படித்த இளைஞர்களிடத்தில் மூடநம்பிக்கை குடிகொண்டிருப்பதை விரட்டியடிக்க இம்மாத விளக்கப் படம் சரியான சாட்டையடி.

— என். அன்பழகன்,
சென்னை-5.

ரஷ்யத் திரைப் படங்கள் நன்றாக ஓடினாலும் அவை அவைப் பின்பற்றி (பெண்களைச் சிறுமைப் படுத்துப் காட்சிகள் இடம் பெறாமல்) படம் தயாரிக்கும் நிலையில் நம் தயாரிப்பாளர்கள் இல்லையே என்ற ஆதங்கம் நெஞ்சில் எழாமல் இல்லை.

— பி. எஸ். பரமசிவம்,
மதுரை-1.

வேல் டைப் பௌண்ட்ரி

பேசி: 27087.

புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
எல்லா மொழி அச்செழுத்துக்கள்,
போஸ்டர் எழுத்துக்கள்
எல்லாவித அச்சக உபகரணங்கள்.

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## எமக்கு வந்தவை





**கொலைந்துபோன கோழிக்கு**: கவிதைத் தொகுப்பு (2-00) - பூ. சீனிவாசன், இப்ராஹிம் முபாரக் - ஈரப்பூ வெளியீடு, 43, பெரிய கடை வீதி, ஆரணி-632301.

**வெய்யில் நாற்றுகள்**: கவிதைத் தொகுப்பு (6-00) வண்ணை வளவன், திருமகள் நிலையம், 55, வெங்கட நாராயணா ரோடு, தி. நகர், சென்னை-600 017.

**மக்கள் நலம் பேணும் சோஷலிச சமுதாயம்: விக்தூர் கிளாவ்தியெங்கோ**, - சோவியத் நாடு பிரசுரங்கள், 115, தியாகராய ரோடு, சென்னை-600 017. விலை - குறிப்பிடப்படவில்லை.

**சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது காங்கிரஸ் தஸ்தாவேஜுகள் தீர்மானங்கள்**: வெளியீடு - சோவியத் நாடு பிரசுரங்கள்.

யுகாக்கினி: கட்டுரைகள் (7-00) இன்குலாப் - கனிமுத்துப் பதிப்பகம், 727, அண்ணா சாலை, சென்னை-600 006.

**இளம் விடியல்**: கவிதைத் தொகுப்பு (2-50) பதிப்பாசிரியர் எஸ். ஏ. சுகுமாரன், புதுயுகம் பிரசுரம், தூத்துக்குடி-628002.

**தலைவலி, வயிற்றுவலி நீங்க தன்னிகரற்ற மருந்துகள்**: வைத்திய சித்தர் கே. எஸ். லட்சுமணன், மெஸர்ஸ் தமிழ்நாடு பதிப்பகம், 36-3, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை-600 017.

**வளர்க அறிவு**: (முதியோர் கல்விக்கான பாட நூல்) ம. சி. கல்யாணசுந்தரம், அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. எண். 617, மயிலாப்பூர், சென்னை-600 004.

**பாசிசமும் கல்விக் கொள்கையும்** (3-50) எரிதழல்

**தாய்நிலம்** - கவிதைத் தொகுப்பு (4-50) கே. உதயா, பராசு.

**மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள்** (6-00) கோ. கேசவன்

**கானல்** - நாவல் (30-00) - கே. டானியல்.

மேற்கண்ட நான்கு நூல்களும் கிடைக்குமிடம்: தோழமை, 20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம்-612001.



FREE E - BOOKS , www.thamizham.net.,

[illegible] 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)




# SAKTHI SUGARS LIMITED

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

**Head Office:**
73-A, Race Course Road.
Coimbatore-641 018.

**Reg. Office & Factory:**
Sakthinagar-638 315.
Periyar District.


ஆசிரியர் : கு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : கி. ராமச்சந்திரன், அச்சிடுபவர் : எஸ். எம். ரவீந்திரன்; ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005; முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,